**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 115/2022**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

பி.வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ்.முத்துராமன்,பி.எல்.,சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**DW- 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரேவதி | க/பெ.: | சசிகுமார் |
| கிராமம்: | கள்வீராம்பாளையம் | தாலுக்கா: | கோயம்புத்தூர் |
| மதம்: | | தொழில்: | |
| வயது: | 39 | முகவரி: | 11/1 ஏ – காமராஜர் வீதி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of **13.02.2026.**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பில் சான்று ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**5 ம் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்தின் பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால் - என் பெயரில் தான் உள்ளது. அந்த பத்திரத்தை அடமானம் வைத்து வங்கியில் கடன் வாங்கியுள்ளேன் என்றாலும் MOD நான் செய்துக்கொடுத்துள்ளேன் என்றாலும் - சரிதான். வழக்கு சொத்து பத்திரத்தை வைத்து வங்கியில் கடன் வாங்கியதால் அந்த பத்திரத்தை என் வசம் தான் கொடுக்கவேண்டும் என்றால் - சரிதான்.

**(குறுக்கு விசாரணை வாதி தரப்பில் வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது)**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,

சார்பு நீதிபதி

மன்னார்குடி.